## கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுக வாழ்வாதாரங்கள் செயற்திட்டம் (மீளெழுச்சி செயற்திட்டம்) - 2013

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுக வாழ்வாதாரங்கள் செயற்திட்டத்தின் (மீளெழுச்சி செயற்திட்டம்) 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையே செய்துகொள்ளப்பட்ட 2007 செப்தெம்பர் 25 ஆந் திகதிய உடன்படிக்கையால் திருத்தப்பட்ட 2004 யூலை 23 ஆம் திகதிய 3935 சிஈ இலக்க அபிவிருத்திக்கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01(பி)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர், 2010 சனவரி 11 ஆந்திகதிய 4671 எல்கே ஆம் இலக்க இரண்டாவது நிதியளிப்பு உடன்படிக்கை மற்றும் 2011 நவம்பர் 29 ஆந்திகதிய 4956 எல்கே ஆம் இலக்க மூன்றாவது நிதியளிப்பு உடன்படிக்கை இச்செயற்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையே கைசாத்திடப்பட்டிருந்தது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மீளெழுச்சி செயற்திட்டத்தின் (கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுக வாழ்வாதாரங்கள் செயற்திட்டத்தின்) கடன் உடன்படிக்கையின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் அவற்றிற்கு அயலிலுள்ள பகுதிகளிலுமுள்ள கலவரத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்வாதார நிலையை மீளமைத்தல், விவசாய மற்றும் ஏனைய உற்பத்திகளையும் வருமானங்களையும் விரிவாக்கல் மற்றும் நிலைத்து நிற்கத்தக்க சமுக மற்றும் பொருளாதார மீள் ஒருங்கிணைப்பிற்கான இயலுமையை கட்டியெழுப்புதல் என்பவற்றிற்காக உதவுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் யூ.எஸ்.டொலர் 156.89 மில்லியன் ஆனதுடன் அவற்றில் ஐ.அ.டொலர் 124.70 மில்லியன் அல்லது 88.35 சதவீதம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் (ஐடிஏ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 13.72 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 2.72 மில்லியன் ஆன மீதித் தொகை முறையே இலங்கை அரசாங்கத்தாலும் செயற்திட்டத்தின் நலனாளிகளாலும் நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது தனது நடவடிக்கைகளை 2004 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள்,

கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதலுக்கு மீளளிப்புக்கான விண்ணப்பங்களை ஆதராப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது நியாயமான நம்பிக்கைகொள்ள முடியும் என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான ந்வடிக்கைகளை எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததென்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது நியாயயூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 2,836,561,233 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 14,293,598,505 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது ஏற்பட்ட செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | **கூறுகள்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|---|
| | | **2013** | **2012** | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | சிவில் வேலைகள் | 2,143,597,249 | 2,966,078,625 | 7,440,823,920 |
| (ஆ) | பொருட்களும் உபகரணங்களும் | 2,528,865 | 28,559,725 | 367,535,597 |
| (இ) | ஆலோசனைச் சேவைகள் | 108,934,967 | 162,015,760 | 873,291,364 |
| (ஈ) | அதிகரிக்கும் கிரயம் | 146,122,106 | 190,425,231 | 1,069,265,005 |
| (உ) | உப மானியங்கள் மீது செய்யப்பட்ட செலவினம் | 435,378,046 | 747,023,085 | 4,286,744,475 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | வெள்ளச் சேதம் | இல்லை | இல்லை | 255,938,144 |
| | மொத்தம் | 2,836,561,233 | 4,094,102,426 | 14,293,598,505 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | யூ.எஸ்.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 8,391,543 | 1,067,075,280 |
| கூட்டு : மீள் நிரப்பல்கள் | 15,404,279 | 1,988,468,365 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 26,942,559 |
| | 23,795,822 | 3,082,486,204 |
| கழி :பற்றுதல்கள் | 18,461,417 | 2,384,996,782 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 5,334,405 | 697,489,422 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்றாவது நிதியளிப்பு உடன்படிக்கை (இல. 4956) தொடர்பில் செயற்திட்டத்தால் பேணப்பட்ட பேரேட்டின் பிரகாரம், சிவில் வேலைகளின் கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 4,430,277,516 ஆகும். எவ்வாறாயினும், இது ரூபா 4,430,159,470 ஆக நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. ரூபா 118,046 தொகையான சிவில் வேலைகளின் கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவினம் மீதான வித்தியாசம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 6 நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் |
| ஐடிஏ உடன்படிக்கை இலக்கங்கள்: | | | | | | | |
| 3035 | 75.00 | 7,450 | 576 | 5.17 | 568.45 | 61.05 | 6,715.15 |
| 4671 | 12.35 | 1,358 | 132 | 1.20 | 131.89 | 12.13 | 1,334.03 |
| 4956 | 54.98 | 6,048 | 1,992 | 18.11 | 1,991.71 | 42.11 | 4,632.27 |
| இலங்கை அரசாங்கம் | 14.56 | 1,372 | 135 | 1.22 | 134.27 | 10.94 | 1,203.43 |
| **மொத்தம்** | **165.89** | **16,228** | **2,835** | **25.69** | **2,826.32*** | **126.23** | **13,884.88*** |

* நலன்புரி பங்களிப்பு மற்றும் அட்டுறு செலவினத்திற்காக செய்யப்பட்ட கணக்கீட்டு சீராக்கல்கள் உள்ளடக்கியமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்படட்ட தொகைகளுடன் இத்தொகைகள் உடன்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்ட நடவடிக்கைகளிற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றும் 2013 திசெம்பர் 31 வரை அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன.

| கூறுகள் | செயற்திட்ட உடன்படிக்கையின்படி ஒதுக்கப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட செலவினம் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| சிவில் வேலைகள் | 59,608,488 | 7,786,361,295 | 59,403,003 | 7,440,823,920 |

| | | | | |
|---|---|---|---|---|
| பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 2,593,927 | 338,831,820 | 2,450,272 | 367,535,597 |
| ஆலோசனை சேவைகள் | 6,413,130 | 837,728,464 | 5,930,556 | 873,291,364 |
| அதிகரிக்கும் கிரயம் | 3,447,315 | 450,305,813 | 3,225,880 | 1,069,265,005 |
| உடன்படிக்கையின் கீழான உப மானியங்கள்: | | | | |
| இல. 3935 | 33,530,998 | 4,379,988,060 | 26,674,773 | 3,285,125,659 |
| இல. 4671 | 6,844,687 | 894,087,541 | 6,859,365 | 799,503,831 |
| இல. 4956 | 15,685,502 | 2,048,919,340 | 2,778,188 | 202,114,985 |
| மொத்தம் | 128,124,047 | 16,736,222,333 | 107,322,037 | 14,037,660,361* |

* இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளில் ஏற்பட்ட செலவினம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெள்ளத்தால் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்ட மக்களிற்காக அத்தியாவசிய ஆதரவை வழங்குவதே செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கையாக உள்ளது. எவ்வாறாயினும், மூன்றாவது நிதியளிப்பு உடன்படிக்கை இல. 4956 இன் கீழான வாழ்வாதார ஆதரவளிப்பு நடவடிக்கைகளிற்காக உப மானியங்களாக ஒதுக்கப்பட்ட ரூபா 2,049 மில்லியன் தொகையான நிதிகளில், ரூபா 363 மில்லியன் அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 18 சதவீதம் மாத்திரமே குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சனசமூக கைநூலின் III ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக உப மானியங்களாக முதலாவது நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் ரூபா 1,455,403,200 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரை அந்த நடவடிக்கைகளிற்காக ரூபா 2,050,065,282 தொகை

செலவழிக்கப்பட்டிருந்தது. இதன்படி, உரிய நோக்கங்களிற்காக ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 594,662,082 ஆல் ஒதுக்கீட்டை விஞ்சியிருந்தது.

(இ) அவசர வடக்கு மீட்டெடுப்பு செயற்திட்டம் (ஈஎன்ஆர்ஈபி) என அழைக்கப்பட்ட இன்னொரு செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கபட வேண்டுமென வேண்டப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இச் செயற்திட்டத்தால் ரூபா 31,819,663 தொகை செலவழிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

### 6.2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

(அ) கிராமிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தின் படி, மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கைகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| | மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கைகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | எண் | எண் | எண் | எண் | எண் |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் | 2,414 | 1,027 | 2,120 | 949 | 294 | 78 |
| வாழ்வாதார ஆதரவு மீதான உப கடன்கள் | 159,888 | 57,333 | 94,627 | 19,988 | 65,261 | 37,345 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ள வேண்டிய நிர்மாண வேலைகள் செயற்திட்ட நடவடிக்கைகள் 2014

திசெம்பர் 31 இல் மூடப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

(ii) செயற்திட்டமானது முதலாவது நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் சுழற்சி நிதியத்திலிருந்து நலனாளிகளிற்கு 159,888 கடன்கள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் மொத்த ஒதுக்கீட்டின் 59 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 94,627 கடன்கள் மாத்திரம் 2013 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டமானது இரண்டாவது நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் சுழற்சி நிதியத்திலிருந்து நலனாளிகளிற்கு 57,333 கடன்கள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் மொத்த ஒதுக்கீட்டின் 35 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 19,988 கடன்கள் மாத்திரம் 2013 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரால் செய்யப்பட்ட விளக்கத்தின் படி, இலக்குகள் எழுமாறான அடிப்படையில் செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான நடவடிக்கைகள் வியாபார பிரேரணைகளின் பொருத்தப்பாடு ஊடாக கடன்வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) கொத்தனி மட்ட வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள்

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி, மீளாய்வாண்டின் போது இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கைகள் என்பன தொடர்பிலான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | செயல்நடவடிக்கை திட்டத்தின்படி மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| | **எண்ணிக்கைகள்** | **எண்ணிக்கைகள்** |
| கிராமிய அபிவிருத்தி ஒழுங்கமைப்பு கொத்தனிகள் | 114 | 17 |
| சிறிய கொத்தனிகள் | | 29 |
| குடும்ப பொருளாதார | | |

| | | |
|---|---|---|
| உயர்வு | | |
| பொதி கொத்தனிகள் | | 17 |
| | 114 | 63 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 வரை பூர்த்தியாக்கப்பட்ட மொத்த கொத்தனி நடவடிக்கைகளில், கிழக்கு மாகாணத்தில் அதிகளவு மோதல்களால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தின் ஒன்றாக இருந்த அம்பாறை மாவட்டத்தில் எந்தவொரு நடவடிக்கையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துப்படி, அம்பாறை மாவட்டத்தில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிலிருந்து வாய்மொழி பிரேரணைகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே, இலக்குகளை அடைய முடியாதிருந்தது.

(ii) முன்னேற்ற அறிக்கையின் படி, திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 யூன் 11 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனை அந்த இரண்டு நடவடிக்கையும் அத்தகைய நடவடிக்கைகளிற்காக வழங்கல் அதிகாரம் பெறுகின்றதின்றதிலுள்ள தாமதம் காரணமாக ஆரம்ப கட்டத்தில் இருந்ததென வெளிப்பட்டது.

(இ) வெள்ளப் பாதிப்புக்களிற்காக மேற்கொள்ளப்பட்ட சிவில் வேலைகள் மற்றும் புனரமைப்பு வேலைகள்

செயல் நடவடிக்கைத்திட்டம் - 2103 இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளின் இலக்குகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் பூத்த்தியாக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆக்கக்கூறுகள்** | **செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூத்த்தியாக்கப்பட்ட நடவடிக்கைகள்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **சிவில் வேலைகள்** | | |
| சிறு குளங்கள் | 144 | 101 |
| **வெள்ளச் சேத புனரமைப்பு** | | |
| வாழ்வாதார மீளமைப்பு நடவடிக்கைகள் (பொலி நெற் கவுஸ்) | 3,026 | 988 |
| சிறிய மட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு | 273 | 183 |
| கிராமிய வீதிகளின் புனரமைப்பு | 620 | 546 |
| குடிதண்ணீர் நீர் திட்டத்தின் புனரமைப்பு | 96 | 53 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 வரை 144 கிராமிய குளங்கள் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இத்திகதி வரை 102 குளங்கள் மாத்திரமே புனரமைக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துப்படி, ஏனைய 43 சிவில் வேலைகள் செயற்பாட்டில் இருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 வரை 3,026 வாழ்வாதார மீளமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியாக்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், இத்திகதிவரை நடவடிக்கைகளின் பயனற்ற வடிவமைப்பு காரணமாக 988 நடவடிக்கைகள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 6.2.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) காலநிலை சிமாட் விவசாய (சீஎஸ்ஏ) பொலி நெற் கவுசின் கொள்வனவு

3,000 பொலி நெற் கவுசின் நிர்மாணத்திற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று விவசாய நோக்கங்களிற்காக செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் அதில் 10 மாவட்டங்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 428 பொலி நெற் கவுசுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாழ்வாதாரத்தை மீளமைப்பதற்கும் விவசாய உற்பத்திகளை உயர்த்துவதற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள

மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் கிராமங்களிற்கு உதவியளிப்பதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக உள்ளபோதிலும் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் எந்தவொரு பொலி நெற் கவுசும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட பொலி நெற் கவுசுகளை கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான வழங்குநரை தெரிவுசெய்வதற்கு கேள்வி நடைமுறையை பின்பற்றுவதற்கு ஒவ்வொரு மாட்டங்களிலும் உள்ள பிரதி செயற்திட்ட பணிப்பாளர்களிற்கு அறிவுறுத்தியிருந்தார். எவ்வாறாயினும், இத்துறையில் வழங்குநரின் உற்பத்தி இயலளவு மற்றும் அதன் கடந்தகால அனுபவங்களை கருத்திற்கொள்ளாமல் மேற் குறிப்பிடட்ட 428 பொலி நெற் கவுசுகளை வழங்கி பொருத்துவதற்கு சகல 10 மாவட்டங்களிற்காகவும் ஒரு தனியார் கம்பனி மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

(iii) உடன்பட்ட சேவைகளின் வேண்டப்பட்ட தரம் மற்றும் ஏற்பாடுகள் பொலி நெற் கவுசுகளின் கொள்வனவின் பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டிய போதிலும், அத்தகைய தேவைப்பாடுளைச் செய்யாமல் சில சந்தர்பங்களில் ஒவ்வொரு பொலி நெற் கவுசிற்கும் ரூபா 85,000 தொகையான கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அத்தகைய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

- வேண்டப்பட்ட அளவீடுகளிலிருந்து விலகி 300 பொலி நெற் கவுசுகளிற்காக ரூபா 3,276,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் படி, விவசாய நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு ஒரு விவசாயிக்காக ரூபா 9,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீது செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வு விவசாய நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு பொலநறுவை மாவட்டத்திலுள்ள 24 விவசாயகளிற்கு ரூபா 216,000 பெறுமதியான அத்தகைய பொருட்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது.

- மேலும், ஒரு பொலி நெற் கவுசிற்காக ரூபா 3,000 பெறுமதியான ஸ்பிங்லர் முறைமை அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 14 விவசாயிகளிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஸ்பிங்லர் முறைமையின் பெறுமதி ரூபா 49,000 ஆக இருந்தது.

(ஆ) வில் வடிவிலமைக்கப்பட்ட பொலி நெற் கவுசின் கொள்வனவு

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக, செயற்திட்டமானது 1,200 பொலி நெற் கவுசினை கொள்வனவு செய்வதற்கு 2011 இல் ஒப்பந்தமொனிறினை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தகாரருடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் படி, மத்திய மாகாணத்தில் விவசாயிகளிற்காக ரூபா 155,595 கிரயத்தில் 1,200 வில் வடிவமுடைய பொலி நெற் கவுசினை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாத்தளை மற்றும் கண்டி மாவட்ட விவசாயிகளிற்காக வழங்கப்பட்ட முறையே ரூபா 158,486 மற்றும் ரூபா 159,694 தொகையான 73 அத்தகைய பொலி நெற் கவுசுகளிற்காக வித்தியாசமான வீதங்கள் செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவாக, ரூபா 242,451 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பொலி நெற் கவுசுகளை கொள்வனவு செய்வதற்காக சாத்திய வளக் கற்கையோ அல்லது கொள்வனவு நடைமுறைகளோ பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, ஏனைய மாவட்டங்களிற்காக பொருத்தமான சுற்றுச்சூழல் அல்லாத ஒரு மாவட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட வில் வடிவமுடைய பொலி நெற் கவுசின் மேலதிக வேலைகளிற்காக ரூபா 16,327,284 தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(iii) மேலும், குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி திருத்தங்களிற்காக செய்யபபட்ட கொடுப்பனவுகள் அந்நேரத்தில் மேலதிகமாக இல்லாத போதிலும் வளைவு வடிவமுடைய பொலி நெற் கவுசினை திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ஒரு மூன்றாம் தரப்பினருக்கு ரூபா 1,761,020 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிர்மாணத்திற்கான மண் வழங்களிற்கான ஒப்பந்தம்

ஒன்பது குளங்களின் அணையின் நிர்மாணத்திற்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலின் படி, வெளி இடங்களில் மண் பயன்பாட்டிற்காக அகழ்தல், போக்குவரத்து மற்றும் ஏனைய கிரயங்கள் என்பவற்றிற்காக புறம்பான வீதங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் குளங்களிலிருந்து அகழப்பட்ட அதன் மண்ணைப் பயன்படுத்தியிருந்தி குளங்களின் அணை நிர்மாணத்திற்காக பயன்படுத்தியிருந்தார். மேலும், வெளி இடங்களிலிருந்து மண் அகழ்தல் போக்குவரத்து கிரயத்தைக் கருத்திற்கொள்ளாமல் ஒப்பந்தகாரருக்கு மொத்த அளவீட்டுப் பட்டியல் தொகை ரூபா 44,881,497 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தரக்கட்டுப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாடு

12 குள நிர்மாணத்திற்காக தரப் பரிசோதனைக்காக மதிப்பீடுகளில் ரூபா 2,109,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்06 குளங்களிற்காக ரூபா 114,318 தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. ரூபா 1,994,682 தொகையான மிகுதி நிதிகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசன முறைமைகளின் புனர்நிர்மாணம்

செயற்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசன முறைமைகளின் புனர்நிர்மாணம் மீதான நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகள் பல சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(i) பவுறன சங்காவில் வீதி ரூபா 22,258,620 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த லங்காபுர பிரதேச சபையானது 2014 மார்ச் 17 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டிருந்த வீதியில் மேற்பரப்பில் பல ஓட்டைகள் உள்ளதாக வீதிகளை கையளிப்பதற்கு தடுக்கப்பட்டிருந்தது.

(ii) உனகட்டு ஓயா அணைக்கட்டின் நிர்மாணத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் படி, பிணைச்சல் பெட்டிகளுடன் சேர்த்து தண்ணீர் உட்புகாத கதவுகள் வழங்குவதற்காகவும் பொருத்துவதற்காகவும் ரூபா 604,539 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் பிணைச்சல் பெட்டி ஒன்றிற்காக ரூபா 244,200 தொகை மேலதிக தொகை

கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 1,465,200 மொத்தக் கிரயம் அந்த நோக்கத்திற்காக செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 623,876 பெறுமதியான பிரப்பன்காடு அணைக்கட்டு நிர்மாணத்தின் கீழான மேலதிக வேலைகள் வேண்டப்பட்ட அளவு பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட வரைவுகளில் உள்ளடக்கபட்ட கதவுகளின் அளவை விடக் குறைவாகவாக இருந்தமையால், அணைக்கட்டின் 11 தண்ணீர் உட்புகாத கதவுகளிற்காக 11 இறப்பர் தண்ணீர் அடைப்புகள் பொருத்த மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) இராஜா எலாவில் மின்னேரியா ஓயாவிற்கு குறுக்கே பாலம் ஒன்றின் நிர்மாணத்திற்காக படம்வரைவுகள் தயாரிப்பதற்காக தனியார் ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 416,665 தொகை செலுத்தப்பட்டிருந்தது. படவரைவுகளின் படி, பாலத்தின் அகலம் 5.9 மீற்றராக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட படவரைவுகளை மாற்றம் செய்வதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தின் அகலம் 4.15 மீற்றராக இருந்தது. இதன் விளைவால், படவரைவு தயாரிப்பதற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 416,665 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(v) கிம்புலாகல் குளத்தின் புனரமைப்பிற்காக முனைப்பு நுழைவு பகுதியில் 1.2 ஹெட்டயரில் காட்டினை மேலோட்டமாக சுத்திகரிப்பதற்காக செயற்திட்டத்தால் ரூபா 150,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் காட்டுப் பகுதியின் 0.50 ஹெட்டயர் மாத்திரம் சுத்தப்படுத்தியிருந்ததுடன் அத்தகையவாறு ரூபா 87,500 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 6.2.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம், ஒப்பந்த பெறுமதி ரூபா 15 மில்லியனை விட அதிகமாக இருந்தால் ஒப்பந்த பெறுமதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி (சீஐஜீஎவ்எல்) கழிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 15 மில்லியனை

விஞ்சியிருந்த ஒப்பந்த பெறுமதியான 80 ஒப்பந்தங்களிலிருந்து ரூபா 5,355,921 தொகையான சீஜஜீஎவ்எல் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பராக்கிரமபுர சந்தி முதல் கொப்பேக்கடவ சந்தி வரை மற்றும் கொப்பேக்கடவ சந்தி முதல் சம்பந்துனர்ம வரையான இரண்டு வீதிகளின் முன்னேற்றத்திற்கான ஒப்பந்தம் முறையே ரூபா 31,552,232 மற்றும் ரூபா 46,512,985 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட முன்னேற்ற வேலைகளிற்கான ஒப்பந்தம் ஒப்பந்தம் வழங்கிய திகதியிலிருந்து ஒரு ஆண்டின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் முன்னேற்ற வேலைகளிற்காக ரூபா 23,808,727 கூட்டுமொதத் தொகையான கொடுப்பனவு செய்து மீள வடிவமைக்கப்பட்டதுடன் அவசர வடக்கு மீட்டெடுப்பு செயற்திட்டத்தால் (ஈஎன்ஆர்ஈபி) வழங்கப்பட்ட நிதிகளின் கீழ் இன்னொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்ட நிதிகளில் செலவழித்த ரூபா 23,808,727 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(இ) அம்பாறை மாவட்டத்தில் சங்கமத்தில் நீத்தையாறிற்கு குறுக்கே உடுகுடல அணையின் புனரமைப்பிற்கான ஒப்பந்தம் ரூபா 15,908,588 ஒப்பந்த பெறுமதிக்காக 2012 ஆகஸ்ட் 21 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த புனரமைப்பு வேலைகள் பயிர்ச்செய்கை காரணமாக வேலைத்தளத்திற்கு நுழைய முடியாதிருந்ததாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,915,367 தொகை செலுத்திய பின்னர் 2014 பெப்ரவரி 11 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவாக, செயற்திட்ட நிதிகளில் செலவழித்த ரூபா 2,915,367 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஈ) ரூபா 16,516,120 தொகைக்காக 3.9 கி.மீ நீளமான வீதியின் மேற்பரப்பில் கிரவல் நிரப்புவதற்கும் பரப்புவதற்கும் மற்றும் 1.55 கி.மீ நீளமான வீதி கொங்றீட் இடுவதற்காகவும் 2011 செப்தெம்பர் 05 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் 2012 ஆகஸ்ட் 12 இல் வேலையை கைவிட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரர் வேலையின் 40 சதவீதம் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 6,853,381 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டமானது மிகுதி வேைலையை பூர்த்தியாக்குவதற்கு ரூபா 27,403,423 தொகைக்காக வேறொரு ஒப்பந்தகாரருடன் உடன்படிககை கைசாத்திடப்பட்டது. ஆகவே, செயற்திட்டமானது ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் கேள்வியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியை முறைப்படி மதிப்பய்வு செய்திருக்காமையால் முழு வேலைகளையும் பூர்த்தியாக்குவதற்கு செயற்திட்டமானது மேலதிகமாக ரூபா 17,740,684 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(உ) செயற்திட்டமானது மாதம் ஒன்றிற்கு ஆகக்கூடியது 2,500 கிமீ பயன்பாட்டிற்கு உட்படுத்த மாதம் ஒன்றிற்கு ரூபா 125,000 வீதத்தில் 7 ½ மாத காலத்திற்கான மேற்பார்வை நடவடிக்கைகளிற்காக பொறியியலாளருக்கு வாகனம் வழங்கவதற்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஒரே காலப்பகுதியில் அதே ஒப்பந்தகாரர் அதே நிபந்தனைக்கு உட்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 வீதத்தில் வேறொரு நிர்மாண வேலைக்காக வாகனம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தார். ஆகவே, மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 வீதத்தில் வாகனம் வடகைக்கு அமர்த்தப்பட்டிருக்குமாயின் செயற்திட்டமானது ரூபா 562,500 தொகையை சேமித்திருக்க முடியும்.

## 6.5 சிறு நிதி திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்குதல்

செயற்திட்டமானது கிராமத்தவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு சிறு நிதி திட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. சிறு நிதி திட்டத்தின் மாவட்ட வாரியான செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | ஒருமுகப்படுத்திய கிராமங்களின் எண்ணிக்கை | செயற்திட்ட நிதிகளிலிருந்து வழங்கப்பட்ட கடன்கள் | சுழற்சி நிதிகளிலிருந்து வழங்கப்பட்ட கடன்கள் | நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகள் | ஐயக் கடன்களின் தொகை | வழங்கப்பட்ட கடன்களின் சதவீதமாக ஐயக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | |
| அம்பாறை | 56 | 74.0 | 75.9 | 61.0 | 5.8 | 8 |
| மட்டக்களப்பு | 60 | 75.0 | 141.8 | 60.4 | 8.7 | 12 |
| திருகோணமலை | 51 | 82.0 | 119.9 | 79.6 | 11.9 | 15 |
| வவுனியா | 97 | 114.0 | 119 | 93.5 | 25.6 | 22 |
| மன்னார் | 88 | 115.0 | 195.9 | 64.0 | 9.4 | 8 |
| யாழ்ப்பாணம் | 73 | 103.0 | 157.2 | 80.1 | 9.5 | 9 |
| கிளிநொச்சி | 62 | 83.0 | 68.3 | 47.2 | 11.1 | 13 |
| முல்லைத்தீவு | 89 | 71.0 | 91.8 | 62.9 | 17.0 | 24 |
| அநுராதபுரம் | 70 | 83.0 | 173.5 | 83.3 | 13.5 | 16 |
| பொலநறுவை | 50 | 72.0 | 110.8 | 67.1 | 7.6 | 11 |
| புத்தளம் | 51 | 71.0 | 130.5 | 65.6 | 6.6 | 9 |
| மொனறாகலை | 55 | 90.0 | 99.3 | 79.7 | 2.7 | 3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்தம் | 802 | 1,033.0 | 1,483.90 | 844.40 | 129.40 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டமானது முதலாவது நிதியளிப்பு உடக்படிக்கையின் கீழ் 2005 முதல் 2008 வரையான காலப்பகுதியின் போது 237 ஒருமுகப்படுத்திய கிராமங்களில் சிறு நிதி திட்டம் அமுல்படுத்தியிருந்ததுடன் 8,935 நலனாளிகளிற்காக துணைநிலை கடன்களாக ரூபா 183 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது மேற்குறிப்பிடப்பட்ட நலனாளிகளிற்கு வழங்கப்பட்ட கடன்களை கண்காணிப்பதற்கு 2008 ஆம் ஆண்டின் பின்னர் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இதன்படி, செயற்திட்டமானது செயற்திட்ட நிதிகளை தவறாக பயன்படுத்துவதற்கு நலனாளிகளிற்கு சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது.

(ஆ) சிறு நிதி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிற்ககும் ஒதுக்கப்பட்ட நிதிகளில், செயற்திட்ட நிதிகளின் கருத்திற்கொள்ளவேண்டிய தொகை வங்கி மீதி, நிலுவையான கடன் மீதிகள் மற்றும் ஐயக் கடன்கள் என்றவாறு இருந்தது. ஆகவே, சிறு நிதி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்டிருந்த நோக்கங்களிற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. சில மாவட்டங்களில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மாவட்டம்** | **செயற்திட்ட நிதிகளில் வழங்கப்பட்ட கடன்கள்** | **காசு மீதி** | **வங்கி மீதி** | **ஐயக் கடன் தொகை** | **நிதியத்தின் சொத்தின் தற்போதைய பெறுமதி** |
|---|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| வவுனியா | 114.0 | 2.0 | 25.0 | 25.6 | 126.5 |
| மன்னார் | 115.0 | 0.6 | 42.1 | 9.4 | 106.1 |
| யாழ்ப்பாணம் | 103.0 | 1.5 | 28.0 | 9.5 | 109.6 |
| கிளிநொச்சி | 83.0 | 1.1 | 36.8 | 11.1 | 85.2 |
| முல்லைத்தீவு | 71.0 | 1.3 | 20.7 | 17.0 | 84.9 |

(இ) செயற்திட்ட நிதிகளிலிருந்து நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறவீடு என்பன அம்பாறை, வவுனியா மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் வழங்கப்பட்ட மொத்தக் கடனில் 40 சதவீதத்திற்கு மேல் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஏனைய 09 மாவட்டங்களில் நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் அந்த மாவட்டங்களில் வழங்கப்பட்ட மொத்த கடன்களின் 20 சதவீதத்திற்கு மேல் பிரதிநிதித்துவப்படுதியது.

(ஈ) ஐயக் கடன்களிற்கான ஏற்பாடு வவுனியா மாவட்டத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட மொத்தக் கடனின் 20 சதவீதத்திற்கு மேல் பிரதிநிதித்துவப்படுதியது.